**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 203/2024 PW- 1**

Name : Lakshmanan
Father / Husband name : Elumalai
Village : Keezhmavilangai
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026.

A1 A2 present. APP present. Defence counsel present.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காயம்பட்டதற்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் போலிசாரிடம் நான் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. சிகிச்சை எடுத்துக்கொள்ளும் போது சம்பவம் குறித்து மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அதனை அவர் குறித்துக்கொண்டார் என்றால் சரிதான். சாட்சி சங்கீதா எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கும் 1 வது எதிரியின் குடும்பத்திற்கும் முன் பகை எதுவும் இல்லை என்றால் சரிதான். திருவிழாவின் போது கூட்டம் போட்டு கணக்கு பார்த்த போது பிரச்சனை ஏற்பட்டது, அப்போது ஊர் மக்கள் சுமார் 100 பேர் இருந்தார்கள் என்றால் சரிதான். 1 வது எதிரி பொய் கணக்கு எழுதியதாக பொதுவாக சொன்னார், எனக்கு எதிராக சொல்லவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியும் திருவிழாவிற்கு கணக்கு போடுகிறார்கள் என்றால் சரிதான். அது சம்மந்தமாக 1 வது எதிரி கேட்ட போது ஊர் மக்கள் 15 நபருடன் சேர்ந்து நானும் 1 எதிரியை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. புகாரை நான் கைப்படஎ ழுதவில்லை, வழக்கறிஞர் வைத்து எழுதினேன் என்றால் சரிதான். வழக்கறிஞரை கேட்டால் தான் புகாரில் உள்ள விவரம் கேட்டால் தான் தெரியும் என்றால் அங்கு உள்ள அனைவருக்கும், எனக்கும் தெரியும். புகாரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது, நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்று போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான், சண்டை முடிந்த பிறகு வந்தார்கள். சம்பவம்

நடந்த அன்று இரவு 1 வது எதிரியை போலிசார் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரியல்ல, மறுநாள் காலை சுமார் 9.00 மணியளவில் ஊரில் இருந்து 1 வது எதிரியை அழைத்து சென்றார்கள். சம்பவம் சம்மந்தமாக அன்றைய தினம்இரவு நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, நான் மருத்துவமனையில் இருந்தேன். மறுநாள் காலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது எதிரியை போலிசார் விசாரித்துக்கொண்டு இருந்தார்கள் என்றால் இல்லை, புகார் கொடுத்த பிறகு அழைத்து வந்து விசாரித்தார்கள். 2 வது எதிரி சம்பவயிடத்திற்கு வரவில்லை, அசிங்கமாக திட்டவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். கையால் எழுதினார்களா அல்லது தட்டச்சு செய்தார்களா என்றால் கையால் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். காயம்பட்ட வத்துமலையை கூட்டத்தில் 5 நபர்கள் தாக்கியதால் காயம்பட்டது என்றால் சரியல்ல. கூட்டத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று தெரியவில்லை, அதில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரியின் மீது பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கலை நான் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. உண்மையில் சம்பவம் நடைபெற்று இருந்தால் செங்கலை போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரியை அடித்துவிட்டு அதில் இருந்து தப்பிக்க வத்துமலைக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 203/2024 PW- 2**

Name : Murugan
Father / Husband name : Govindasamy
Village : Keezhmavilangai
Age : 48
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026.

A1 A2 present. APP absent. Defence counsel present.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்டை சம்மந்தமாக நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றைய இரவு போலிசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் இல்லை, மறுநாள் வந்தார்கள். சம்பவம் நடந்த அன்றைய இரவு நான் ஊரில் இருந்தேனா என்றால் இருந்தேன். போலிசார் எப்போது சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காலை 08.00 மணிக்கு மேல் வந்தார்கள். அப்போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். (**நீதிமன்ற கேள்வி** : போலிசார் சண்டை சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் வரைபடம் வரைந்த போது விசாரித்தார்கள். போலிசார் சண்டை சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள் ) சம்பவத்திற்கு மறுநாள் போலிசார் என்னை விசாரித்த பிறகு மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அப்போது மணி காலை சுமார் 08.00 மணி இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தன்று இரவு நடந்த கூட்டத்தில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். 1 வது எதிரி வீண் செலவு பற்றி கேட்ட போது நாங்கள் கும்பலாக சேர்ந்து 1வது எதிரியை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. 2 வது எதிரி சம்பவயிடத்திற்கு வரவில்லை, தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல. கும்பில் நடந்த

**சண்டையில் வத்துமலைக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செங்கலை போலிசாரிடம் எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை, காண்பித்தேன் போலிசார் பார்த்தார்கள் எடுத்து செல்லவில்லை.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 203/2024 PW- 3**

Name : Munusamy
Father / Husband name : Raghavan
Village : Keezhmavilangai
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026.

A1 A2 present. APP absent. Defence counsel present.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்டை சம்மந்தமாக நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தின் போது 100 பேர் கூட்டத்தில் இருந்தோம் என்றால் சரிதான். 1 வது எதிரி கணக்கு கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, 1 வது எதிரி கணக்கு நோட்டை துாக்கி வீசியதால் பிரச்சனை ஏற்பட்டது. அதனால், நாங்கள் 1 வது எதிரியை அடித்தோம் என்றால் சரியல்ல. 1 வது எதிரி கணக்கு கேட்ட போது நாங்கள் 15 நபர்கள் 1 வது எதிரியை அடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த அன்றைய இரவு வெள்ளிமேடுபேட்டை போலிசார் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்ன நடந்தது என்று கேட்டு விசாரித்து எழுதிகொண்டார்கள் என்றால் சரிதான். அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை, மறுநாள் காலை 09.00 மணியளவில் காவல் நிலையம் சென்ற போது கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்த அன்று இரவு போலிசார் 1 வது எதிரியை அழைத்து சென்றார்கள் என்றால் இல்லை. செங்கலை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை, செங்கலால் அடித்ததாக சொன்னேன். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் விசாரித்தார்கள், வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்ற போது அபரஞ்ஜி, ராஜி காவல் நிலையத்திற்கு வந்தார்கள், அவர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். 1 வது

எதிரி வீண் செலவு பற்றி கேட்ட போது நாங்கள் கும்பலாக சேர்ந்து 1 வது எதிரியை அடித்துவிட்டோம், கும்பில் நடந்த சண்டையில் வத்துமலைக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, 2 வது எதிரி சம்பவயிடத்திற்கு வரவில்லை, தகாத வார்த்தைகளால் திட்டவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.